# இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி),சென்னை– 04

# கல்லூரி ஆண்டறிக்கை (2022 -2023)

## தமிழ்த்துறை

2022 – 2023 ஆம் கல்வியாண்டில்,தமிழ்த்துறையின் இலக்கியமன்றத் தொடக்கவிழா 27.10.2022 அன்று நடைபெற்றது. இவ்விழாவுக்கு புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி மையத்தின் மேனாள் இயக்குநர் பேராசிரியர் ப. மருதநாயகம் சிறப்பு விருந்தினராக வருகைபுரிந்து,“பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள்”என்னும் பொருண்மையில் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில்,துறையின் சார்பாக ஆண்டுதோறும் வெளியிடப்பெறும் ‘ஊற்று’ஆய்வுமலர் ‘அருந்தமிழ் ஆறு’என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டது. இந்த ஆண்டு 13ஆவது ஆய்வுமலரை,சிறப்பு விருந்தினர் வெளியிட,கல்லூரி முதல்வர் முனைவர் பா.உமாமகேஸ்வரி அவர்களும், செங்கல்பட்டு அரசுக் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் இ. மதியழகி அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

முத்தமிழ் விழாவின் ஒருபகுதியாக 11.2.2023 அன்று தமிழிசை விழா நடத்தப்பட்டது. இசையமைப்பாளர் - ஊடகவியலாளர் திரு.ஜேம்ஸ் வசந்தன் அவர்களின் தமிழோசை - இசைநிகழ்வு–சங்கத்தமிழ் - பல்இசைவடிவில் சிறப்புற நடைபெற்றது. 15.2.2023 அன்று முத்தமிழ் விழாவில் கலைமாமணி,சொல்வேந்தர் திரு.சுகிசிவம் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இக்கல்வியாண்டு தமிழ்த்துறையில் ஐவர் முனைவர் பட்டம் பெற்றனர். பொதுவாய்மொழித் தேர்வுகள் தமிழ்த்துறையில் நடைபெற்றன.

| வ.எண் | ஆய்வாளர் | நெறியாளர் | நாள் |
|---|---|---|---|
| 1. | ந. நிர்மலா | முனைவர் இர. சிவசக்தி | 5.8.2022 |
| 2. | மா.ஜெயசுதா | முனைவர் பெ.சிவசக்தி | 27.9.2022 |
| 3. | சி.வத்சலா | முனைவர் ப.கு.ஹேமரஜனி | 26.11.2022 |
| 4. | இரா. கோசலை | முனைவர் ப.பத்மினி | 28.2.2023 |
| 5. | ஏ. தனசேகர் | முனைவர் இரா.அனுராதா | 16.3.2023 |

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் கஸ்தூரிபாய் அவர்களும் முனைவர் பட்டம் பெற்றார்.

அறிஞர்கள், தலைவர்கள் பிறந்த நாளையொட்டி,தமிழ் வளர்ச்சித்துறை நடத்தும் பேச்சுப் போட்டிகளை நடத்தும் தென்சென்னையின் மையமாக

இராணிமேரிகல்லூரி விளங்குகிறது. தமிழ்த்துறை ஆசிரியர்கள் முனைவர் மல்லிகா, முனைவர் கமலாமுருகன் இப்போட்டிகளுக்குப் பொறுப்பேற்று நடத்தினர்.

துறைத்தலைவர் முனைவர் சு.தமிழ்ச்செல்வி அவர்களுக்கு,**ACHARYA 2022 – MARATHON GURU** என்னும் விருதினை **VYLEARN & AKSHAY'S FOUNDATION** அமைப்பு அளித்துச் சிறப்பித்தது.

தமிழகஅரசின் மாபெரும் கனவுத்திட்டம் - தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை–திட்டத்தின் பணிகளை மேற்கொள்ளுவதற்கு,மாநில அளவில் பொறுப்பு அலுவலராகத் தமிழ்த்துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் இர.சிவசக்தி அவர்களைக் கல்லூரிக் கல்வி இயக்ககம் நியமித்துள்ளது.

துறைஆசிரியர்கள் முனைவர் ப.கு.ஹேமரஜனி,முனைவர் க.புவனேஸ்வரி, முனைவர் கமலாமுருகன் ஆகியோர் இந்தஆண்டு புத்தாக்கப் பயிற்சியில் கலந்துகொண்டனர்.

23.02.2023 அன்று இராணிமேரி கல்லூரிக்குள் இயங்கும் சமூகப் பள்ளி மாணவர்களுக்குப் போட்டிகள் பலவற்றை வைத்து தமிழ்த்துறை ஆசிரியர்கள், மாணவியர் பள்ளி மாணவர்களை ஊக்கப் படுத்தினர்.